



### கல்வி பொது தராதரப் பத்திரம் (சாதாரண தரம்)

# கத்தோலிக்கத் திருமறை

# வினா விடைகள்

# 2021

வெளியீடு: தேசிய மறைக்கல்வி, திருவிவிலியப்பணி நடுநிலையம்

## கல்வி பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2021
## கத்தோலிக்கத் திருமறை

---

### பகுதி I

**(சரியான விடை கோடிட்டு காட்டப்பட்டுள்ளது)**

01. பழைய ஏற்பாட்டில் மக்களால் விரும்பப்படுகின்ற ஒரு நூல்
    1. யோபு  2. ஏசாயா  3. <u>எஸ்தர்</u>  4. தானியேல்

02). புனித பவுல் தன் கைப்பட எழுதிய இரு திருமுகங்கள் ஆவண.
    1. எபேசியர் மற்றும் எபிரேயர் ஆகும்
    2. <u>கலாத்தியர் மற்றும் பிலிப்பியர் ஆகும்</u>
    3. உரோமையர் மற்றும் பேதுரு ஆகும்
    4. பிளமோன் மற்றும் யாக்கோபு ஆகும்

03). இறை அன்பினதும் இயேசு கிறிஸ்துவின் கீழ்ப்படிதலினதும் அடையாளம் சிலுவை எனக் குறிப்பிட்டவர்.
    1. புனித யூதா ஆவார்
    2. <u>புனித பவுல் அடிகள் ஆவார்</u>
    3. புனித யாக்கோபு ஆவார்
    4. புனித யோவான் ஆவார்

04) சீயோனில் கடவுளாம் ஆண்டவர் சாலமோன் அரசனுக்கு கனவில் தோன்றிய போது அரசன் கடவுளிடம் கேட்டது.
    1. குழந்தை பேறு ஆகும்
    2. நீண்ட ஆயுள் ஆகும்
    3. செல்வமாகும்
    4. <u>ஞானம் நிறைந்த உள்ளம் ஆகும்</u>

05) இயேசு சிலுவை மரத்திலிருந்து கூறிய "தந்தையே உன் கைகளில் என் உயிரை ஒப்படைக்கிறேன்" என்பதனை குறிப்பிடும் நற்செய்தியாளர்.
    1. <u>புனித லூக்கா ஆவார்</u>
    2. புனித மாற்கு ஆவார்
    3. புனித யோவான் ஆவார்
    4. புனித மத்தேயு ஆவார்

06) திருச்சபையின் பிறந்த நாளாக கொள்ளப்படுவது
    1. <u>பெந்தக்கோஸ்தே தினம் ஆகும்</u>
    2. நத்தார் தினமாகும்
    3. பெரிய வியாழக்கிழமையாகும்
    4. பாஸ்கா ஞாயிறு தினமாகும்

07) பன்னிரு திருத்தூதர்கள் மத்தியில் முதல் மறை சாட்சியானவர்.
    1. புனித யோவான் ஆவார்
    2. <u>புனித யாக்கோபு ஆவார்</u>
    3. புனித பேதுரு ஆவார்
    3. புனிதப் பிலிப்பு ஆவார்

08) புனித பவுல் சார்ந்த கோத்திரம்
    1. ஏலி ஆகும்  2. யூதா ஆகும்  3.ரூபன் ஆகும்  4. <u>பெஞ்சமின் ஆகும்</u>

09) மூன்றாவது தூதுரை பயணத்தின் பின்பு புனித பவுல் தங்கியிருந்தது.
    1. கலாத்தியில் ஆகும்
    2. <u>எருசலேமில் ஆகும்</u>
    3. அந்தியோக்கியாவில் ஆகும்
    4. தெசலோனிக்காவில் ஆகும்

10 பின்வருவனவற்றுள் புனித பேதுருவினால் வெளிப்படுத்தப்பட்ட கூற்றுக்களை மாத்திரம் கொண்ட தெரிவு

A. "நீர் ஆட்சி உரிமை பெற்று வரும் போது என்னையும் நினைவில் கொள்ளும்"
B. "எனக்கு உன் மீது அன்பு உண்டு என்பது நீர் அறியாதது ஒன்றா?"
C. "ஆயினும் உமது சொற்படியே வலைகளைப் போடுகிறேன்"
D. "விண்ணகத்தின் திறவு கோள்களை நான் உன்னிடம் தருவேன்"

    1. A, B  2. A, C  3. <u>D, C</u>  4. B, D

11. 7ம் புவனேகபாகு மன்னனின் வேண்டுகோளின்படி கி.பி. 1543இல் இலங்கைக்கு வருகை தந்த மறைபோதக குழுவினர் சார்ந்த துறவற சபை
    1. இயேசு சபையாகும்
    2. அகஸ்தியனார் சபையாகும்
    3. பிரான்சிஸ்கன் சபையாகும்
    4. பிரான்சிஸ்கன் சபையாகும்

12. இலங்கை திருச்சபை வரலாற்றினை பிரிக்கும் பிரதான காலப்பகுதிகள்
    1. மூன்று ஆகும்
    2. நான்கு ஆகும்
    3. ஐந்து ஆகும்
    4. ஆறு ஆகும்

13. கத்தோலிக்க திருவழிபாட்டின் ஊற்றும் உச்சமும் உரிமையாவது
    1. குருத்துவத்திற்கு ஆகும்
    2. மெய் விவாகத்துக்கு ஆகும்
    3. மெய்விவாகத்திற்கு ஆகும்
    4. திவ்ய நற்கருணை ஆண்டவருக்கு ஆகும்

14. “அவர் பலியாக படைத்த இரத்தம் வெள்ளாட்டுக் கிடாய்கள் கன்றுக்குட்டிகள் ஆகியவற்றின் இரத்தம் அல்ல அவரது சொந்த இரத்தமே அவர் ஒரே ஒருமுறை தூயத்துக்குள் சென்று எக்காலத்துக்குமென அதை படைத்து நமக்கு என்றும் உள்ள மீட்பு கிடைக்கும்படி செய்தார்” என குறிப்பிடப்படும் திருமுகம் எழுதப்பட்டது.
    1. எபிரேயருக்கு ஆகும்
    2. கலாத்தியருக்கு ஆகும்
    3. கொரிந்தியருக்கு ஆகும்
    4. தெசலோனிக்கேயருக்கு ஆகும்

15. புனித யோசேப்வாஸ் அடிகளார் அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டது.
    1. திருத்தந்தை முதலாம் பிரான்சிஸ் அவர்களால் ஆகும்
    2. திருத்தந்தை முதலாம் அருளப்பர் சின்னப்பர் அவர்களால் ஆகும்
    3. திருத்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் அவர்களால் ஆகும்
    4. திருத்தந்தை 16ஆம் பெனடிக் அவர்களால் ஆகும்

16. “தந்தையரே! உங்கள் பிள்ளைகளுக்கு எரிச்சல் மூட்டாதீர்கள் மாறாக அவர்களை ஆண்டவருக்கு ஏற்ற முறையில் கண்டித்து திருத்தி அறிவு புகட்டி வளர்த்து வாருங்கள்” என்ற பகுதி எடுக்கப்பட்டது.
    1. நீதிமொழிகள் நூலிலிருந்து ஆகும்
    2. சபையுடையாளர் நூலிலிருந்து ஆகும்
    3. கொலோசியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து ஆகும்
    4. எபேசியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து ஆகும்

17. ஒப்புரவு அருளடையாளத்தில் மன்னிப்பு வழங்குவதற்காக குருவானவர் தமது ஆயரிடம் விசேட அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டிய பாவம்.
    1. கருக்கலைப்பாகும்
    2. ஏழைகளை புறக்கணித்தல் ஆகும்
    3. தொற்று நோய்களை பரப்புதல் ஆகும்
    4. தற்கொலை செய்து கொள்ள முயற்சித்தல் ஆகும்

18. புனித பவுல் எடுத்துக்காட்டுவதன்படி ஒருவர் தம் உடலுக்கு எதிராக செய்யும் பாவம்
    1. பொய் சொல்லுதலாகும்
    2. களவு ஆகும்
    3. கோபமாகும்
    4. பரத்தமையாகும்

19 7ம், 10ம் கட்டளைகளுக்கு எதிரான பாவமானது
    1. பெற்றோரை பேணாதிருத்தல்
    2. ஒழுக்கத்திற்கு மாறாக செயல்படுதல்
    3. பிறருடைய நேரத்தை வீணாக்குதல்
    4. வேறு தெய்வங்களை வணங்குதல்

20. இயேசு ஒப்புக்கொடுத்த உன்னத குருவின் செபத்தில் அடங்கியுள்ள சீடர்களுக்காக செய்யப்பட்ட செபத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுவது.
    1. அவர்களை பாதுகாக்க வேண்டும் என்பதாகும்.
    2. அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும் என்பதாகும்.
    3. அவர்களுடைய குற்றங்களை மன்னிக்க வேண்டும் என்பதாகும்.
    4. அவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும் என்பதாகும்.

21. அறிவுரை பாணியில் அமைந்த மொழிநடையில் காணப்படும் இறையியல் மரபு யாது?
1. யாவே மரபு
2. எலோகிம் மரபு
3. இணைச்சட்ட மரபு
4. குருக்கள் மரபு

22. இணைத்திருமுறை நூல்கள் மட்டும் குறிப்பிடப்படும் விடையை தெரிவு செய்க.
1. யூதித்து, தோபித்து, பாரூக்கு மற்றும் சாலமோனின் ஞானம்
2. யூதித்து, பாரூக்கு, திருப்பாடல்கள் மற்றும் யோபு
3. யூதித்து, அரசர்கள் மற்றும் சாலமோனின் ஞானம்
4. யூதித்து, பாருக்கு, நீதிமொழிகள் மற்றும் நெகேமியா

23. பின்வரும் பண்புகளில் எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர்களின் பண்புகளை மாத்திரம் கொண்ட தெரிவு யாது?
A. தியானத்தில் ஆழ்ந்திருத்தல்
B செரோபிகள் மூலம் செயல்படுதல்
C குழுவாக பணி செய்தல்
D தனி ஆளாக மட்டும் பணியில் ஈடுபடுதல்
1. A, B
2. A, C
3. A, D
4. B, C

24. இறைவனின் செய்தி, அடையாளம் மூலம் யாருக்கு வழங்கப்பட்டது?
1. மீக்கா இறைவாக்கினருக்கு ஆகும்
2. எலியா இறைவாக்கினருக்கு ஆகும்.
3. ஏசாயா இறைவாக்கினருக்கு ஆகும்.
4. எசேக்கியல் இறைவாக்கினருக்கு ஆகும்

25. புனித மாற்கு செய்தியை ஆரம்பிப்பது,
1. திருமுழுக்கு யோவான் பாலை நிலத்தில் ஆற்றிய போதனையுடன் ஆகும்.
2. இயேசுவின் மறை தூது பணியுடன் ஆகும்.
3. சக்கரியாவின் பலி ஒப்புக்கொடுத்தலுடன் ஆகும்.
4. இயேசுவின் பரம்பரையை முன் வைப்பதுடன் ஆகும்.

26 செபத்தின் மூலம் அல்லது மற்றவர்களுக்கு உதவுவதன் மூலம் இறை அனுபவத்தை பெற்றுக் கொண்டுள்ள உமக்கு அழைப்பு விடுக்கும் நற்செய்தி எது?
1. புனித மாற்கு நற்செய்தி
2. புனித மத்தேயு நற்செய்தி
3. புனித லூக்கா நற்செய்தி
4. புனித யோவான் நற்செய்தி

27. "நீ மண்ணில் பயிரிடும் பொழுது அது இனிமேல் உனக்கு பலன் தராது" இவ்வாறு இறைவனால் யாருக்கு கூறப்பட்டது?
1. ஆதாமுக்கு ஆகும்
2. மோசேக்கு ஆகும்
3. ஆபேலுக்கு ஆகும்
4. காயினுக்கு ஆகும்

28. இறைவன் மோசேக்கு காட்சி கொடுத்தது.
1. உயிருள்ள ஒரு பிராணியாக ஆகும்
2. காரிருளாக ஆகும்
3. எரியும் முட்செடியின் நெருப்புச் சுவாலையாக ஆகும்.
4. வானதூதர் ஒருவராக ஆகும்

29. எகிப்தியர் முகம் கொடுத்த 10 துன்பங்களில் இறுதி இரண்டும் யாவை?
1. தவளைகள் பெருக்கம் ,தண்ணீர் இரத்தமாதல்
2. கொசுக்களின் தொல்லை, தலை மகன் சாவு
3. கொப்புளங்கள் தோன்றுதல், கல்மலை
4. காரிருள் உண்டாகுதல், தலைமகன் சாவு

30. இஸ்ராயேல் மக்கள் .................. வழியாக இறை மக்களானது போல நாமும் .................. வழியாக இறை பிள்ளைகள் ஆகின்றோம். வெற்றிடத்திற்கு பொருத்தமான விடைகள் முறையே
1. சீனாய் உடன்படிக்கையின், திருமுழுக்கு 2. சீனாய் உடன்படிக்கை, திருமுழுக்கு
3. சீனாய் உடன்படிக்கை, உறுதிப் பூசுதல் 4. விருத்தசேதனம், சீனாய் உடன்படிக்கை

31. நீதி, சமத்துவம் ஆகியன பற்றி துணிவுடன் பேசியதால் யாருக்கு இறப்பு ஏற்பட்டது?
1. யோனா இறைவாக்கினருக்கு 2. எசேக்கியல் இறைவாக்கினருக்கு
3. ஆபேலுக்கு 4. திருமுழுக்கு யோவானுக்கு

32. “பணப்பையோ வேறு பையோ மிதி அடிகளோ எடுத்துச் செல்ல வேண்டாம்” என இயேசு தமது சீடர்களுக்கு அறிவுரை வழங்கியது, மறைதூது பணியில் ஈடுபடுவோருக்கு கிடைக்கும் ........... எடுத்துக்காட்டுவதற்காகும்
1. வழிகாட்டுதலை 2. ஆன்மீக சுகத்தை 3. இறைபராமரிப்பை 4.இறை புகழ்ச்சியை

33. புனித லூக்கா நற்செய்தியில் 17: 20-25 இன் படி இறையரசு
1. எம் மத்தியில் உள்ளது 2. ஏழைகள் மத்தியில் உள்ளது
3. ஒதுக்கப்பட்டுள்ளோர் மத்தியில் உள்ளது. 4. செல்வந்தர் மத்தியில் உள்ளது

34. திருமணம் என்னும் அருள் அடையாளத்தின் வெளி அடையாளமாக விளங்குவது என்ன?
1. திருத்தலம் 2. திருமண ஒப்பந்தம் 3. மோதிரம் மாற்றுதல் 4. மாலை அணிவித்தல்

35. “மனம் மாறத் தேவையில்லாத 99 நேர்மையாளர்களை குறித்து உண்டாகும் மகிழ்ச்சியை விட மனம் மாறிய ..................... உண்டாகிறது” புனித லூக்கா 15:7 இன் படி வெற்றிடத்திற்கு பொருத்தமான விடை யாது?
1. ஒரு மனிதனுக்குள் நன்மை
2. ஒரு பாவியை குறித்து விண்ணுலகில் மிகுதியான மகிழ்ச்சி
3. ஒருவருக்கு இறைவனோடு நட்புறவு
4. ஒருவருக்கு இறைவனின் பிள்ளையாக மகிழ்ச்சி முப்பது

36. துறவற வாழ்வின் பண்புகளை மாத்திரம் கொண்ட தெரிவு யாது?
1. கற்பு, கீழ்ப்படிதல், ஏழ்மை 2. கற்பு, குழுவாழ்வு, தவவாழ்வு
3. குழுவாழ்வு, ஏழ்மை, பணிவாழ்வு 4. குழுவாழ்வு, செபவாழ்வு, பணி வாழ்வு

37. கிறிஸ்துவினால் திருத்தூதர்களுக்கு கொடுக்கப்பட்ட மறைதூது பணியை ஏற்றுக்கொண்ட கிறிஸ்தவர்களுக்கு கிடைத்தது.
1. பணிக்குருத்துவமாகும் 2. பொதுக்குருத்துவமாகும்
3. இறைவாக்கு பணியாகும் 4. மேய்ப்பு பணி ஆகும்

38 இயேசு கிறிஸ்து நமக்கு காட்டும் அன்புக்கு பிரதி அன்பு காட்ட அவரால் நிறுவப்பட்டு, தூய ஆவியின் பிரசன்னத்தில் தொடர்ந்து நிலவும் மாபெரும் பொதுநிலையினரின் அப்போஸ்தலிக்க சபை.
1. புதுவாழ்வு இயக்கம் 2. இயேசுவின் திரு இருதய சபை
3. இளம் கத்தோலிக்க மாணவர் இயக்கம் 4. வின் டி போல் சபை

39 மரியாளின் இவ்வுலக வாழ்வின் இறுதியில் இறைவன் அவரை விண்ணகத்துக்கு எடுத்துக் கொண்டமை
1. மனித அவதாரம் எனப்படும் 2. விண்ணேற்பு எனப்படும்
3. விண்ணேற்றம் எனப்படும் 4. மாசில்லா உட்பவம் எனப்படும்

40 மரியாள் 18 முறை காட்சி அளித்து செபமாலை பத்தியின் மாண்பை வெளிப்படுத்தியது.
1. லூர்து நகரில் லூசியாவிற்காகும் 2. பாத்திமா நகரில் ஆகும்
3. லூர்து நகரில் ஆகும் 4. பாத்திமா நகரில் ஜெசிந்தாவிற்கு ஆகும்

## பகுதி II

**(01)**

i. திருத்தூதர் பணிகள் நூலின் அமைப்பு முறையில் இரண்டினை எழுதுக?
- மறைபரப்பு பணிக்கான ஆயத்தம்
- ஜெருசலேமில் சான்று பகர்தல்
- யூதேயாவிலும் சமாரியாவிலும் சான்று பகர்தல்
- தூய பவுலின் மறை தூது பணி

ii. திருச்சபையில் நிலவ வேண்டிய கட்டாய பண்புகள் இரண்டினை குறிப்பிடுக.
- ஏகம்
- பரிசுத்தம்
- கத்தோலிக்கம்
- அப்போஸ்தலிக்கம்

iii. திவ்விய நற்கருணை உணவில் அருள் அடையாள வடிவில் நாம் பெற்றுக் கொள்பவை யாவை?
- இயேசுவின் திரு சரீரம் / அல்லது சதை / அல்லது உடல்
- இயேசுவின் திரு இரத்தம்

iv. நிலம் ஒன்றினை விற்று பெற்றுக் கொண்ட பணம் தொடர்பாக புனித பேதுருவை ஏமாற்றியதன் காரணமாக இறந்த இருவரின் பெயர்களை தருக?
- அனனியா
- சபிராள்

v. பீடத்தை ஆயத்தம் செய்யும் சடங்கின் உப பிரிவுகள் இரண்டினையும் எழுதுக
- காணிக்கை பவனியும், காணிக்கை ஒப்புக்கொடுத்தலும்
- காணிக்கை மீது மன்றாட்டு

vi. இறைவன் ஆபிரகாமோடு செய்து கொண்ட உடன்படிக்கையின் பிரதான விடயங்கள் இரண்டினையும் எழுதுக.
- பெரியதொரு சந்ததியைப் பெற்றுக் கொடுத்தல் / சந்ததி / இனம்
- எக்காலத்துக்கும் உரிமையான ஒரு நாட்டைப் பெற்றுக் கொடுத்தல்

vii. திருமுழுக்கின் போது வெளிப்படுத்தப்படும் வார்த்தைகள் இரண்டினையும் எழுதுக.
- இறைவனில் நம்பிக்கை வைப்போம்
- சாத்தானையும் அதன் செயல்களையும் விட்டுவிடுவோம்

viii. இறையாட்சியின் மதிப்பீடுகள் பற்றி குறிப்பிடப்படும் உவமைகள் இரண்டினை குறிப்பிடுக.
- விதைப்பவன் உவமை
- வயலில் தோன்றிய களைகள் உவமை
- கடுகு விதை, புளிப்பு மாவு, புதையல், முத்து வலை

ix. ஒரு சந்தி அனுசரிப்பதன் நோக்கங்கள் இரண்டினை எழுதுக.
- தனது பாவங்களுக்கு பரிகாரம் செய்தல்
- தனது மனதை கட்டுப்படுத்த பயிலுதல்
- 40 நாள் உண்ணா நோன்பு இருந்தல்
- இயேசுவை பின்பற்றுதல் ஏழைகளுக்கு உதவுதல் உடலை கட்டுப்படுத்துதல்

x. திருவழிபாட்டு ஆண்டில் இறை அன்னையின் திருவிழாக்கள் இரண்டினை குறிப்பிடுக.
- தை 1 புனித மரியாள் இறைவனின் அன்னை
- மாசி 2 காணிக்கை அன்னையின் திருவிழா
- வைகாசி 31 எலிசபெத்தை மரியா சந்தித்த பெருவிழா
- ஆவணி 15 மரியன்னை விண்ணேற்பு திருவிழா
- புரட்டாதி 8 மரியாளின் பிறப்பு திருவிழா
- மார்கழி 8 மரியாளின் அமல உற்பவ திருவிழா

(02)

அ) கத்தோலிக்க திருச்சபை பின்பற்றும், கற்பிக்கும் படிப்பினைகளை பெற்றுக் கொள்ளும் மூலங்கள் இரண்டினையும் குறிப்பிடுக.
- திருவிவிலியம் திருச்சபை பாரம்பரியம்

ஆ)பஞ்சாகமத்தை சேர்ந்த நூல்கள் மூன்றின் பெயர்களை தருக.
- தொடக்க நூல், விடுதலைப் பயணம், லேவியர், எண்ணிக்கை, இனைச்சட்டம்

இ) நீர் ஒரு தலைவராக செயல்படும் முறையை 10 கட்டளைகளில் எவையேனும் ஐந்துடன் தொடர்புபடுத்தி விளக்குக.
- தலைவராக இருப்பவர் தன் சொல்லாலும் செயலாலும் மற்றவர்களுக்கு முன்மாதிரிகள் உடையவராக விளங்க வேண்டும்.
- பத்து கட்டளைகளை கடைபிடித்து வாழும் ஒரு தலைவராதல்.
- முதலாம் கட்டளையின்படி ஒரே கடவுளை விசுவசித்து, ஆராதித்து, அவரை அன்பு செய்து, பிரமாணிக்கத்துடன் வாழுதல்.
- இண்டாம் கட்டளையின்படி அனைத்திற்கும் மேலாக இறைவனை மதித்து அவர் திருப்பெயருக்கும் அவருடைய நன்மை தனத்திற்கும் சாட்சியாக வாழுதல்.
- மூன்றாம் கட்டளையின்படி ஓய்வு நாட்களை தூய்மையாக கடைப்பிடித்தல், ஆலய பணிகளில் ஈடுபடுதல், ஆன்மீக வாழ்வை பலப்படுத்தக்கூடிய கருத்தரங்குகளில் கலந்து கொள்ளுதல், நல்ல நூல்களை வாசித்தல், திருவிவிலிய அறிவை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுதல், மறை பாடசாலையில் இணைந்து சிறுவர்களுக்கு மறையை கற்றுக் கொடுத்தல்.
- நான்காம் கட்டளையின்படி மற்றவர்களை மதித்து, அவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து ஒரு தலைவராக செயல்படுவதுடன் முதியோர்கள், அறிவில் சிறந்தோரிடம் தாழ்மையாக, தான் அறியாதவற்றை கேட்டு கற்றுக் கொள்ளுதல்.
- ஐந்தாம் கட்டளையின்படி அனைவரதும் உயிர் வாழும் உரிமையை பாதுகாத்து இவருக்கும் சொல்லாலும் செயலாலும் துன்பம் வருவிக்காது மற்றவர்களின் தேவைகளில் உதவி செய்து வாழுதல்.
- ஆறாம், ஒன்பதாம் கட்டளைகளின் படி தூய்மையான வாழ்க்கை வாழ முற்படுதல்.
  ஒரு தலைவராக எப்பொழுதும் மற்றவர்களுக்கு முன்மாதிரிகை உடையவராக வாழுதல்.

- ஏழாம், பத்தாம் கட்டளைகளுக்கு ஏற்ப பிறர் உடமைகளையும் பொதுச் சொத்துக்களையும் பாதுகாத்து எதிர்கால சந்ததியினருக்கு அவை பயன்படும் வகையில் அவற்றை விருத்தி செய்து ஒரு நல்ல தலைவராக இறைவனுக்கு சான்று பகிர்ந்து தலைவர் பணியாளராக செயல்படுதல்.

**(03)**

அ) பெந்தகோஸ்து விழாவின் போது யூதர்களால் நிறைவேற்றப்பட்ட விசேட செயல்கள் இரண்டினை எழுதுக?

- நன்றி கூறுதல் முதல் பலனை ஒப்புக்கொடுத்தல்.
- சீனாய் உடன்படிக்கை அல்லது பத்து கட்டளைகளை பெற்றுக் கொண்டதை நினைவு கூறுதல்.
- திருயாத்திரை அல்லது எருசலேம் ஆலயத்திற்கு திருயாத்திரை மேற்கொள்ளல்.

ஆ) தொடக்க திருச்சபையின் சிறப்பான பண்புகள் இரண்டை தருக.

- திருத்தூதர்களின் போதனையில் நிலைத்திருத்தல்.
- நட்புறவு, அப்பம் பிடுதல், செபித்தல் உடைமைகளை பொதுவாக வைத்திருத்தல்.
- பகிர்ந்து வாழுதல்.

இ) உமது ஆலய திருவிழாவின்போது உம்மால் நிறைவேற்றக்கூடிய நற்செயல்கள் ஐந்தினை சுருக்கமாக விளக்குக.

- திருவிழாவுக்கு ஆயத்தமாக இடம்பெறும் சிரமதான பணிகள்.
- ஆலயத்தை சுத்தம் செய்தல் போன்ற தேவைகளில் உதவுதல்.
- ஆலயத்தை அலங்கரிக்க உதவுதல்.
- கொடிமரம் உயர்த்துவதற்கான ஆயத்தப் பணிகளில் ஈடுபடல்.
- தினமும் நவநாள் திருப்பலிகளில் பங்கு பெற்றுதல் மற்றவர்களையும் பங்கு பெற்ற செய்தல்.
- நல்ல ஒப்புரவு செய்து திருவிழாவுக்கு சிறந்ததொரு ஆன்மீக ஆயத்தத்துடன் தயாராகுதல்.
- திருச்சுரூப பவனிக்கான பாதைகளை சுத்தம் செய்தல்.
- திருவிழா வழிபாடுகளில் பங்கு கொள்ள முடியாத நிலையில் உள்ளவர்களுக்கு தேவையான வசதிகளை பெற்றுக்கொடுத்தல்.
- அவர்களை ஆலயம் அழைத்துச் செல்ல உதவுதல்.
- வழிபாட்டிற்கு வாசகங்கள் மன்றாட்டுகள் ஆயத்தம் செய்தல்.

**(04)**

அ) கெஸ்தமனி செபத்தின் மூலம் எடுத்துக்காட்டப்படும் இரண்டு விடயங்களை எழுதுக.

- இறை இயேசுவின் உண்மையான மனிதத்தன்மை.
- இறைவனுக்கும் கிறிஸ்துவுக்கும் இடையே உள்ள நெருங்கிய உறவு.
- இயேசுவின் திருப்பாடுகள் - நமது துன்பத்தில் செபித்தல்.
- சக்தியைப் பெற்றுக் கொள்ள செபித்தல், ஒரு செயலை செய்வதற்கு முன் செபித்தல்,

ஆ) கெஸ்தமனி தோட்டத்தில் தம்முடன் இருந்து செபிக்கும் படி இயேசுவிடம் அறிவுரை பெற்றுக் கொண்ட திருத்தூதர் மூவரின் பெயர்களை எழுதுக.

- பேதுரு, யோவான், யாக்கோபு

ஆ) பாவச் சோதனைகளை வெற்றி கொள்வதற்கு தேவையான சக்தியை வேண்டி செபிக்கப்படும் தனிச் செபம் ஒன்றில் உள்ளடக்க வேண்டிய விடயங்கள் ஐந்தினை எழுதுக.

- இறை புகழ்ச்சி.
- இறை வணக்கம்.
- வேண்டுதல் மன்னிப்பு.
- இறை பாதுகாப்பை வேண்டுதல்.

- செபிக்கும் பழக்கத்தை அனுதின வாழ்வின் ஒரு செயலாக அமைத்துக் கொள்ளல்.
- குடும்பமாக ஒன்று சேர்ந்து ஒவ்வொரு நாளும் செபமாலையை செபித்தல்.
- திருமணத்தியாலம் செப வழிபாடுகளில் கலந்துகொண்டு எனது ஆன்ம வாழ்வை வளரச் செய்தல்.
- ஒவ்வொரு நாளும் ஒரு குறித்த நேரத்தில் செபிக்கும் பழக்கத்தை உருவாக்கிக் கொள்ளுதல்.
- பாவச் சோதனைகளில் இருந்து பாதுகாக்கப்பட வேண்டி விசுவாசத்தில் நிலைத்திருக்கவும் சோதனைகளை தவிர்க்கவும் திடமும் பாதுகாப்பும் வேண்டுதல்.

**(05)**

அ) திருமுழுக்கு யோவானை பற்றி பழைய ஏற்பாட்டில் மலாக்கி 3:1ம் புதிய ஏற்பாட்டில் லூக்கா 1:16லும் குறிப்பிடப்படும் விடயங்கள் இரண்டினையும் எழுதுக.

- மலாக்கி 3:1ல் "இதோ நான் என் தூதனை அனுப்புகிறேன். அவர் எனக்கு முன் வழியை ஆயத்தம் செய்வார்". லூக்கா 1:16 "அவர் இஸ்ராயேல் மக்களுள் பலரை தம் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வர செய்வார்."

ஆ) திருமுழுக்கு யோவானிடம் அறிவுரை பெற்ற குழுவினருக்கு அவர் வழங்கிய அறிவுரைகள் மூன்றை எழுதுக.

- மக்களுக்கு: இரண்டு அங்கிகளை உடையவர்கள் இல்லாதவரோடு பகிர்ந்து கொள்ளட்டும். உணவை உடையவரும் அவ்வாறே செய்யட்டும். உங்களுக்கு குறிக்கப்பட்ட தொகைக்கு அதிகமாக தண்டாதீர்கள். படைவீரருக்கு: நீங்கள் எவரையும் அச்சுறுத்தி பணம் பறிக்காதீர்கள். யார் மீதும் குற்றம் சுமத்தாதீர்கள். உங்கள் ஊதியமே போதும் என்று இருங்கள்.

இ) திருமுழுக்கு யோவானின் வாழ்க்கையில் இருந்து இன்றைய சமுதாயத் தலைவர்கள் எடுத்துக் கொள்ளக்கூடிய முன்மாதிரிகைகள் ஐந்தினை விவரிக்குக.

- நீதி சமத்துவம் என்பவற்றை கடைபிடித்தல்.
- சமுதாயத்தில் ஒற்றுமையையும் உரிமை பாட்டையும் வளர்க்க உதவுதல்.
- சாதி மத பேதமின்றி அனைவரும் நன்மை விளையும் வகையில் செயல்பட தமது சொல்லாலும் செயலாலும் நீதி உடைய தலைவராக செயல்படல்.
- அநீதிக்கு தலை வணங்காதிருத்தல்.
- குற்றங்கள் தீமைகளை அச்சமின்றி தட்டி கேட்டல்.
- ஏழைகள் வாழ்க்கை வசதியற்றோரின் நிலையை உணர்ந்து விலையை உயர்த்த சமுதாய தலைவர்கள் தமது மேலதிக செல்வங்களை பரித்தியாகம் செய்தல்.
- தமது வாழ்க்கை நிலையை மட்டும் உயர்த்திக் கொள்வதை கருத்தில் கொள்ளாது மற்றவர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்த செயல்பட எளிமையான வாழ்க்கை முறையை வாழ்தல்.
- நாட்டு வளங்கள் அனைவரதும் தேவைக்கேற்ப அனுபவிக்கும் வகையில் சமமாக பகிர்ந்து அளித்தல்.

**(06)**

அ) புனித மத்தேயு 5:44 இன் படி விண்ணகத்தில் இருக்கும் உங்கள் தந்தையின் மக்கள ஆவதற்கு செய்ய வேண்டிய செயல்கள் இரண்டினை எழுதுக

- உங்கள் பகைவரை அன்பு செய்தல்.
- உங்களை துன்புறுத்துவோருக்காக செபித்தல்.

ஆ) போரை வெறுத்தல் பற்றி கத்தோலிக்க திருச்சபை கற்பிக்கும் விடயங்கள் மூன்றினை குறிப்பிடுக.

- போரும் போர் கருவிகளை சேகரித்தலும் பயங்கரமானது.
- போருக்காக செலவிடும் பணத்தை கொண்டு உலகத்தில் வறுமையை நீக்கலாம்.
- போரை வெறுத்தலும் வெறுப்பதும் உள்ளார்ந்த அமைதியை கட்டி எழுப்புவதும்.

- போர் கருவிகளை உற்பத்தி செய்வதற்கு எதிராகவும் போரை ஒழிக்கவும் நிறுவனங்களை ஒன்று சேர்த்து செயல்பட வேண்டும்.
- வன்முறைகளை தவிர்த்தல் அமைதியான முறையில் பேச்சு வார்த்தைகள் நடத்தி சமாதானத்தை ஏற்படுத்துதல்.
- செபங்கள் தியானங்கள் வழிபாடுகள் அமைதி வழி போராட்டங்களை நடாத்துதல்.

இ) தற்கால சமுதாயத்தை அமைதியின் பாதையை நோக்கி கொண்டு செல்வதற்காக செய்யக்கூடிய செயல்கள் ஐந்தை விவரிக்குக.

- சமாதானத்தின் அரசனாகிய கிறிஸ்துவுக்குள் வாழ்வதன் மூலம் அனுபவிக்கும் அமைதியை ஒருவரோடு ஒருவர் பகிர்ந்து கொள்ளல்.
- எப்போதும் அமைதியாக இருத்தல்.
- நன்மைக்கு எதிராக செயல்படாதிருத்தல்.
- நன்மனதை ஏற்படுத்திக் கொள்ளல்.
- நீதி, உண்மை, நியாயத்துக்கு மதிப்பளித்தல்.
- பெற்றுக் கொண்டதற்கு நன்றி கூறல்.
- கொடுத்ததை மறந்து விட்டு பெற்றதை நினைவில் வைத்திருத்தல்.
- மற்றவர்களுக்கு நற்செய்தியை வெளிப்படுத்துதல்.
- அமைதியை ஒருவர் ஒருவருடன் பகிர வழி செய்தல்.

**(07)** பின்வரும் தலைப்புகளில் எவையேனும் இரண்டினை தெரிவு செய்து சிறுகுறிப்பு எழுதுமக.

**i) <u>புதிய ஏற்பாட்டில் பாஸ்கா உணவு</u>**

- புதிய ஏற்பாட்டில் பெரிய வியாழன் அன்று இயேசு தமது சீடர்களோடு உண்ட இறுதி இரா உணவு பாஸ்கா உணவாகும்.
- இயேசு நித்தியத்திக்கும் நம்மோடு வாழ திரு உணவாக நற்கருணையை ஏற்படுத்தினார்.
- பழைய ஏற்பாட்டு பாஸ்கா செம்மறியின் இடத்தை அவர் ஏற்றார்.
- தமது உயிரையே சிலுவையில் பலியாக்கி புதிய உடன்படிக்கையின் பாஸ்கா செம்மறியானார்.
- இயேசுவின் பாஸ்கா பலியை உலக முடிவு வரை திருப்பலியில் நினைவுகூர்ந்து பாஸ்கா உணவாக நற்கருணையை பெறுகிறோம்.

**ii) <u>உன் தாயையும் தந்தையையும் மதித்து நட</u>**

- இது நான்காம் கட்டளையின்படி எமக்கு அறிவுறுத்தப்படுகிறது. விடுதலைப் பயணம் 20:12 இன் படி “உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்கு அளிக்கும் நாட்டில் உன் வாழ்நாள் நீடிக்கும்படி உன் தந்தையையும் உன் தாயையும் மதித்து நட” என்பதன் படி பெற்றோரை மதித்து நடக்கும் போது அந்த பிள்ளைகளை இறைவன் ஆசீர்வதிப்பார் என்பது எடுத்துக்காட்டப்படுகிறது. நீதிமொழிகள், சீராக்கின் ஞானம் ஆகிய நூல்களில் இக்கட்டளை பற்றி அறிவுறுத்தப்படுகிறது. தந்தையும், தாயும் இறைவன் நமக்கு தந்த மிகப் பெரும் கொடையாகும். அவர்கள் இறைவனின் பிரதிநிதிகள் ஆவர்.

- பெற்றோர் பெரியோரை உதாசீனம் செய்யாது அவர்களை மதித்து நடத்தல்.
- பெற்றோரை அடித்து துன்புறுத்தி மனம் நோக செய்யாது இருத்தல்.
- ஆசிரியர்களுக்கு பெரியோருக்கு கீழ்ப்படிந்து நடத்தல்.
- முதிர்ந்த நேரத்தில் அவர்களை வயோதிப இல்லத்தில் சேர்க்காது, அவர்களை பராமரித்தல்.
- பெற்றோரால் வழங்கப்படும் சுதந்திரத்தை சரியான முறையில் பயன்படுத்துதல்.
- பெற்றோரை ஏமாற்றாமல் இருத்தல்.

- பெற்றோர் பெரியோரின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றல்.
- தங்களிடம் ஒப்படைத்த பொறுப்புக்களை நிறைவேற்றுதல்.

### iii) <u>இறையாட்ச்சியின் மதிப்பீடுகள் மூலம் இலங்கையின் ஒழுக்க விழுமியங்களை கட்டியெழுப்புவோம்.</u>

- கரங்களை குவித்து கடவுளுக்கு தோத்திரம் எனக் கூறுதல்.
- வீட்டிலிருந்து வெளிப்பயணங்கள் செல்லும் முன்னே, எந்தவொரு முக்கிய செயலை அல்லது ஆரம்பிக்கும் முன்னர் செபித்தல், சிலுவை அடையாளம் வரைதல்.
- பெற்றோர், பெரியோர், ஆசிரியர்களின் பாதம் பணிந்து வணங்குதல்.
- மற்றவர்களுடைய தனிப்பட்ட விடயங்களுக்கு மதிப்பளித்து ஒதுங்கி இருத்தல்.
- பெற்றோரை மதித்தல், உரிய கௌரவம் அளித்தல்.
- மூத்தோர், பெரியோர் முன்னிலையில் எழுந்து நிற்றல். அவர்களை விட மேலாசனங்களில் அமராமல் இருத்தல்.

### iv) குணம் அளிக்கும் அருள் அடையாளங்கள்

- குணம் அளிக்கும் அருள அடையாளங்கள் இரண்டு ஆகும்.
    1. ஒப்புரவு அருள் அடையாளம்
    2. நோயில் பூசுதல் அருள் அடையாளம்

- இவ்விரு அருளடையாளங்கள் வழியாக அதனை பெறுபவருக்கு ஆன்ம உடல் நலம் கிடைப்பதால் குணம் அளிக்கும் அருளடையாளங்கள் என அழைக்கப்படுகின்றன. இந்த ஆன்ம உடல் நலம் நித்திய வாழ்விற்கு வழி வகுக்கின்றது.

- **ஒப்புரவு அருள் அடையாளத்தை குறிக்கும் வேறு பெயர்கள்**

**1. மன மாற்றத்தின் அருளடையாளம்**

தனது பாவ நிலையை ஏற்று அதற்காக மன்னிப்பு பெற்று இறைவனிடம் மீண்டும் திரும்பி வருவதால் அப்பெயரால் அழைக்கப்படுகிறது.

**2. பாவக்கழுவாய் அருள் அடையாளம்**

நமது பாவங்களுக்காக மனம் வருந்துவதன் முக்கியத்துவம் பாவங்களுக்காக பரிகாரம் செய்வதன் முக்கியத்துவமும் அருளடையாளத்தின் மூலம் உணர்த்தப்படுவதால் இப் பெயரால் அழைக்கப்படுகிறது.

**3. பாவ சங்கீர்த்தனம் / ஒப்புரவு**

ஒவ்வொருவரும் தம் பாவங்களை அறிக்கையிட்டு அவற்றிற்கு மன்னிப்பு வேண்டுவதால் இப்பெயர் வழங்கப்படுகிறது.

**4. மன்னிப்பின் அருளடையாளம்**

இவ் அருளடையாளத்தின் முக்கிய பிரதிபலன் பாவ மன்னிப்பாகும். அதனால் மன அமைதி கிடைக்கிறது.

- **உள்ளார்ந்த மனம் வருந்துதல்**

உள்ளார்ந்த மனம் வருந்துதல் என்பது கடவுளின் இரக்கமுள்ள அன்பிற்கு பதில் கூற இறையருளால் இயக்கப்படுகின்ற நொறுங்கிய உள்ளத்தின் இயக்க நிலையாகும். இது செயல்வழி பாவங்களுச்

மன துயரத்தையும், அவற்றை வெறுத்து ஒதுக்குவதையும் எதிர்காலத்தில் மீண்டும் பாவம் செய்யாமல் இருக்கும் உறுதிப்பாட்டையும் கடவுளின் உதவியில் நம்பிக்கை வைப்பதையும் உள்ளடக்கி உள்ளது ஆகும். இது கடவுளின் இரக்கத்தில் நாம் கொள்ளும் எதிர் நோக்கினால் ஊட்டம் பெறுகின்றது.

- ஒப்புரவு அருள் அடையாளத்தை பெறும் ஒருவர் ஐந்து படிமுறைகளை நிறைவேற்ற வேண்டும்.

ஒப்புரவு அருளடையாளத்தின் போது மனம் வருந்துவதற்காக ஐந்து தவச் செயல்களை நிறைவேற்ற முடியும்.

- ஒப்புரவு எனும் அடையாளத்தின் மூலம்,

- உண்மையான ஆன்மீக புதுப்பித்தல் கிடைக்கின்றது.
- இழந்த மனித மாண்பும் இறை உறவும் கட்டியெழுப்பப்படுகிறது.
- பாவங்களுக்கு மன்னிப்பு கிடைக்கிறது.
- மீண்டும் மீண்டும் பாவம் செய்யாமல் இருக்கும் ஆற்றல் கிடைக்கிறது.

**<u>நோயில் பூசுதல் அருள் அடையாளம்</u>**

- நோயாளரை திடப்படுத்துவதற்காக வழங்கப்படும் அருள் அடையாளம் இதுவாகும். இயேசுவின் காலத்தில் இருந்து நோயாளரை குணப்படுத்துதல் இடம்பெற்றிருந்தது. தொடக்க திருச்சபையிலும் இது தொடர்ந்து நடைபெற்று வந்தது. புனித யாக்கோபு எழுதிய திருமுகத்தின் மூலம் இது உறுதிப்படுத்தப்படுகின்றது.

- கடுமையாக நோய்வாய்ப்பட்டிருக்கும் அல்லது வயோதிப நிலைக்கு உள்ளாகி இருக்கும் ஒருவருக்கு ஆன்மீக வல்லமையையும் மன அமைதியையும் உடல் நலனையும் பெற்றுக் கொடுக்கும் அருளடையாளமாக இது விளங்குகின்றது.

- திருச்சபை படிப்பினைகளின் படியும் இறையியல் மரபுகளின் படியும் நோயாளி ஒருவருக்கு தைலம் பூசுதல் அல்லது வெண்ணெய் பூசுதல் மூலம் இவ்வருளடையாளம் நிறைவேற்றப்பட்டு வந்தது. அத்துடன் கூடியிருக்கும் மக்கள் ஒன்று சேர்ந்து நோயாளிகளுக்காக செபிக்கும் போது அது தேற்றுதலாக அமைந்து வந்தது.

- இன்று திருச்சபையால் இது முறைப்படி நிறைவேற்றப்படுகிறது. நோயிற் பூசுதல் சடங்குகளின் படி முறைகள்:
    - ஆரம்பச் சடங்கு
    - பாவ மன்னிப்பு சடங்கு
    - இறைவார்த்தை சடங்கு
    - நம்பிக்கையாளர் மன்றாட்டு
    - தலை மீது கரங்களை வைத்தல்
    - நோயாளர் மீது தைலத்தால் பூசுதல்.
    - நக்கருணை வழங்குதல்.
    - ஆசி வழங்குதல்.

- நோயிற் பூசுதல் அருள் அடையாளத்தின் மூலம் கிடைக்கும் இறையருள்.
- தனிப்பட்ட முறையில் தமதும், முழு திருச்சபையினதும் நன்மைகளுக்காக நோயாளியை கிறிஸ்துவின் பாடுகளுடன் இணைத்தல்.

**வெளியீடு :**
**தேசிய மறைக்கல்வி, திருவிவிலியப்பணி நடுநிலையம்,**
**1ம் மாடி, இல. 19, பல்கம் இடம்,**
**கொட்டா வீதி, கொழும்பு - 08.**

**தொலைபேசி : 011 - 2685459**
**தொலை நகல் : 011 - 2665021**
**மின் அஞ்சல் : natcatbible@gmail.com**

விலை : ரூபா. **600/=**